# சங்க இலக்கியங்களில் மனிதம்!

- முனைவர் வெ.சிவசங்கர்,
பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை, வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை.

மனித மாண்பு என்பது மனித குலத்திற்கே உரிய பெருமையை குறிப்பதாகும். அன்பு, கருணை, பகிர்வு, மன்னிப்பு, நன்றியுணர்வு போன்ற கூறுகளே மனித மாண்பாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கின்ற அன்பு செயல்களின் வெளிப்பாடே மனித நேயம். இன்னும் ஒருபடி மேலே சென்று பார்த்தால் மனிதன் மனிதனை மதிப்பதும் அவனை மாண்புடனே நடத்துவதுமே மனித நேயம்.அந்த வகையில் நல்ல எண்ணங்களை உருவாக்கி. ஆக்க வழியிலான உணர்வை இலக்கியம் உருவாக்குகின்றது. இலக்கினை நோக்கிய சமுதாயம் என்பதைச் சிந்திக்கும்போது அனைவருக்குமான அன்பான அழைப்பும் பரிவான அரவணைப்பும் இலக்கியத்தால் காணக் கிடைக்கின்றன. இதனை மனத்தில் கொண்டு படைப்போர் மனிதத்தை மறவாது இலக்கியத்தில் பதிவு செய்கின்றனர். இலக்கியத்தின் பெரும் பங்கு மனிதத்தை முன்னோக்கி எடுத்து செல்வதாகும் மனிதரையும் அவர் தம் பண்பிணையும் முன் வைத்தே இலக்கியச் சுழற்சி நடைபெறுகிறது.

மனிதனுக்கு மிக முக்கியமாக இருக்க வேண்டியதாகக் கருதப்படும் அன்பு, இரக்கம் போன்ற பண்புகளைக் கொண்டிருக்கும் தன்மை மனிதம் என்றால் அது மிகையாகாது. அத்தகயை மனிதம் மற்றும் அவர்தம் சமூக வாழ்வியலை சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய வேண்டி இக் கட்டுரை சங்க கால மனித வாழ்வியலை அறிவதற்கு தொடக்கமாக அமைய உள்ளது.

சங்க இலக்கியங்களில் மனிதநேயம்

சங்ககால இலக்கியங்களில் வீரமும் காதலும் முதன்னமப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு சிறந்தோங்கி ஒருவருக்

**கிருபானந்த வாரியார் சுவாமிகள் பொன்மொழிகள்**

வருவதும் போவதும் இரண்டு. **இன்பம், துன்பம்**
வந்தால் போகாதது இரண்டு. **புகழ், பழி.**
போனால் வராதது இரண்டு. **மானம், உயிர்.**
தானாக வருவது இரண்டு. **இளமை, மூப்பு.**
நம்முடன் வருவது இரண்டு. **பாவம், புண்ணியம்.**
தவிர்க்க முடியாதது இரண்டு. **பசி, தாகம்.**
நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு. **பந்தம், பாசம்.**
அழிவைத் தருவது இரண்டு. **பொறாமை,கோபம்.**
எல்லோர்க்கும் சமமானது **பிறப்பு, இறப்பு.**



கொருவர் மனிதப் பண்போடு வாழும் நிலையினையும் சங்க இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன மனிதன் சக மனிதனை நேசிக்கிற சக மனிதன் துன்பம் போக்கி வாழ்கின்ற மனித நேயத்துக்கும் அப்பால் உலகத்தில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுகின்ற பிற உயிர்களின் துன்பம் போக்குகின்ற உன்னதமான வாழ்க்கை நெறியைச் சங்க காலம் காட்டுகிறது.

மழை பொழியும் போது ஒரு மண் கட்டி கரைந்து உரு விழக்கிறதே என்று மனம் கசிகின்றான் ஒருவன்; நிலவு தேய்ந்து போகிறதே என்று மனம் கவல்கிறான் ஒருவன்; கடல் இப்படி இரவிலும் உறங்காமல் உலவுகிறதே என்று உள்ளம் வருந்துகிறான் ஒருவன். அஃறிணைப் பொருள்களிடத்து இப்படி ஓர் அருளுணர்வு கொள்ளும் மனிதர்கள். உயர்திணை மாந்தர் வருந்தும்போது எவ்வகை இரக்கம் காட்டுவர்? எங் ஙனம் விரைந்து துயர்மீட்பு செய்வர்? இதுவே மனித நேயம். "கொடையும் தயையும் பிறவிக்குணம்' என்பது சான்றோர் மொழி.

உலகத்தில் இறைவனால் படைக்கப் பட்டுள்ள உயிர்களில் மகத்தானது மனித உயிர். மனித உயிர்க்கு மட்டுமே பகுத்தறிவுச் சிந்தனை உண்டு. அந்தப் பகுத்தறிவுச் சிந்தனையால்தான் மனி தன் ஒரு செயலலைச் செய்யும் முன் பலமுறை சிந்திக்கும் நிலை உள்ளது. அன்பும் அருளும் மனிதர்களிடம் மிகுந்து காண வேண்டும். ஓரறிவு வுடைய முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்குத் தான் ஏறிவந்த தேரை ஈந்தவன் வள்ளல் பாரி ஆவான். கார்காலம் கண்டு ஆடியஐந்தறிவுடைய மயில் குளிரால் நடுங்குவதாகக் கருதித் தன் போர்வைய அளித்தவர் வள்ளல் பேகன் ஆவார். புலவர்கள் தாம் வறுமையுற்று வாடியபோதும் தம் புலமைக்குப் பாிசாக வள்ளல்களிடம் தான் பெற்ற பொருள்களை சுற்றம் அருந்தியும் வறுமை உற்றோர்க்கு வாரி வழங்கியும் வந்தனர். இவ்வாறு எல்லா உயிரும் தம் உயிர் போல எண்ணி வாழ்ந்தனர் சங்கத் தமிழர்கள்.

**வாழ்வியல் நெறி**

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்

வியல் நிகழ்வுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்துகின்றன. சங்கத் தமிழர்களின் வாழ்வியலின் காலக் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியங்களில் இடம் பெறும் வாழ்வியல் செய்திகளை அறிதல் அவசியம் என்னும் நோக்கில் இக் கட்டுரை அமைகின்றது.

சங்க காலத்தமிழர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். அச்சான்றோர்கள் இலக்கியத்தில் வாழ்வாங்கு வாழும் நெறி அறிந்து

வாழ்ந்தார்கள். எப்படியும் வாழ்வது தமிழ் நெறி அல்ல. வாழும் நெறி முறை பிழையாது வாழ்தலும், பிறருக் குப் பயன்பட வாழ்தலும் தமிழரின் வாழ்வியல் ஆகும். உலகிலேயே தமிழர்கள்தான் வாழ்க்கைக்கு இலக் கணம் படைத்தவர்கள். தமிழர்களின் வாழ்க்கை முறை சான்றோர்களால் உருவாக்கப்பட்டதாகும். தமிழர்கள் உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி ஏற்று இன்பமாக வாழ்ந்தனர்.

சங்க இலக்கியம் மனிதநேயத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றது. அஃறிணை உயிர்களில் எறும்பும், வண் டும், புழுவும், பூச்சியும், பறவையும், விலங்கும் துன்பப்படாது பண்டைத் தமிழ் மக்கள் பாதுகாத்த செயலைக் காணும்போது உயர்திணையாகிய மனிதர்களை அக்காலத்தில் எப்படிப் காத்திருப்பர் என்பதை நம்மால் உய்த்துணர முடியும்.

**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுண் பறவை பேதுற லஞ்சி**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்" (அகம்:4)**

என்று தலைவன் தேரூர்ந்து வரும் வழியில் சோலைகளில் வண்டுகள் மலரில் தாதுண்பது இடையூறுபடாம லிருக்கத் தன் தேரின் மணிகளை ஒலி எழுப்பாவாறு அவற்றின் நாவைக் கட்டி விடுகிறானாம் என்ற பாடல் வழி மனித் தன்மை அறிய முடிகிறது எனலாம்.

## கல்வி

கல்வியின் மகத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள் சங்கச் சான்றோர்கள். கல்வியானது தாயின் மனதையும் மாற்றும் ஆற்றல் பெற்றது. ஒரு குடியில் பிறந்தோருள்ளும் மதிப்பளிக்காது அறிவுடையவனையே அரசனும் சிறப் பளிப்பான்.

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக வென்னா தவருள்**
**அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்" – புறம்: 183**

என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப் பினைப் போற்றியுள்ளான். கல்வியால் மட்டுமே சமூகம் வளம் பெறும் என்பதை உலகிற்கு உணர்த்தியவர்கள் சங்கத் தமிழர்கள். இக் கல்வியே மனித வாழ்க்கையை அழகியலாக மாற்றும் வல்லமை படைத்தது.

**ஆற்றுதல் என்பது ஒன்று அளந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பெனப்படுவது தன் கிளை செறாஅமை**
**அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**
**செறுவெனப்படுவது கூறியது மறா அமை**
**நிறையெனப்படுவது கண்டோடாது உயிர் வெளவல்**
**பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்!**
**– கலி.பா.133**

என்ற பாடல் மூலம் மனிதநேயத் தோடு இல்லாதவர்களுக்கு கூட உதவி செய்தல், நண்பர்களைக் காப்பாற்றுதல், உலகப்போக்கை உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளுதல், தான் கூறியபடி நடந்து கொள்ளுதல் போன்ற பிற செயல்களும் மனிதநேயச் செயலாகும்.

தன்மானத்தை இழந்து
எதையும் அடைய வேண்டும்
அவசியம் இல்லை..
எந்த இடத்தில் உன்னை வைக்கிறார்களோ!
அதே இடத்தில் அவர்களையும்
நீ வைத்துவிடு!
உறவுகள் முக்கியம் தான்
அதைவிட சுயமரியாதை முக்கியம்.



உண்மையில் அன்பு எனப்படுவது மனிதநேயத்தோடு உறவினர்களை வெறுத்து ஒதுக்காது ஒன்றி வாழ்வதே ஆகும். பிறர்க்கு உண்டான துன்பத்தைத் தமக்கு நேர்ந்த துன்பமாக எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதே இது தரும் படிப்பினையாகும்.

விலங்குத்தன்மை உடைய மனிதனை மனிதநிலையில் அடையாளம் காட்டுவது அன்பெனும் பண்பாகும். இயந்திரமாக வாழும் மனிதர்களின் மனித வாழ்வினை மேற்கொள்ளச் செய்வது அன்பு ஆகும்.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்திய உடம்பு . – குறள்: 80**

என்பது வள்ளுவரின் கருத்தாகும். அன்புடைமைதான் வாழ்க்கையின் அடிப்படையாகும். உள்ளத்தில் அன்பு இடம் பெறுமானால் அது அமைதி எனப்படும். இவ்வன்பு நெறியில் இருப்பவர்கள்தான் பிறர் மீது மனிதநேயத்துடன் இருப்பதை நம்மால் அறிய முடிகிறது எனலாம்.

பண்டைத்தமிழர் இயற்கையின் அனைத்துக் கூறுகளையும் முற்றும் உணர்ந்திருந்தனர். அதனால்தான் தம்முடைய அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் இயற்கையை அஃறிணை உயிரினங்களை உடனணைத்துக் கொண்டு கண்டு வாழ்ந்தனர். பண்டைத்தமிழரின் இயற்கையை நேசித்து, அதனோடு இயைந்து வாழ்ந்த வாழ்க்கையை, இயற்கையை நேசிக்க மறந்து, அதனை அழிக்க முனைந்துவரும் இன்றைய நூற்றாண்டு மக்களாகிய நாம் என்றும் நினைத்துப் பார்க்கவேண்டும். பழந் தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படுவன சங்க இலக்கியங்கள். தமிழின் தொன்மையையும் வளமையையும் காட்டும் அரிய சான்றுகளாக அவை திகழ்கின்றன. பழந்தமிழரின் வாழ்வியல் கூறுகளை அறிந்துகொள்ள உதவும் வேர்கள் அவைதாம். சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தமிழருடைய அகத்தையும் புறத்தையும் காட்டுவன.

நிறைவாக சங்ககாலம் பண்பாட்டில் வளர்ச்சிபெற்ற, அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் நிறைவு பெற்ற காலம். அன்றைய வாழ்வியல் பண்பாடு போற்றத்தக்கது மட்டுமல்ல, இன்றைய வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் எதிர்கால வாழ்வை வளமுடையதாக்கவும், பயனுடையதாக்கவும் வல்லது என்பதை நாம் உணர வேண்டும்.

***